60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
**தொலைபேசி**: 905.722.3201 905.895.7216
905.727.3141 416.969.8131
**தொலைநகல்**: 905.727.1931
**வலைத்தளம்**: www.yrdsb.ca

அன்பான குடும்பங்களே,

யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலைச் சபை (YRDSB) அறங்காவலர்கள், நான்கு ஆண்டு காலத்திற்குரிய பல ஆண்டு மூலோபாயத் திட்டத்தை (MYSP) இந்த ஆண்டு புதுப்பிக்கின்றனர்.

யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலைச் சபையின் ஆளும் குழுவாக, நீண்டகால மூலோபாய முன்னுரிமைகள் மற்றும் இலக்குகளை அமைப்பதற்கு, அறங்காவலர்கள் வருடாந்த MYSP ஐ நிறுவ வேண்டும். சபையின் இந்த மூலோபாய முன்னுரிமைகள், எங்கள் சமூகத்தின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகளைத் த◌ுல்லியமாகப் பிரதிபலிக்கின்றன என்பதை உறுதிப்படுத்த, இந்த MYSP இன் வளர்ச்சியைத் தெரிவிக்க உதவுவதற்காக, அறங்காவலர் குழு சமூகத்திலிருந்து பின்னூட்டக் கருத்துகளை நாடுகிறது.

மார்ச் 7 முதல் ஏப்ரல் 5 வரை, YRDSB சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் ஒரு கருத்துக்கணிப்பு மூலம் தங்கள் கருத்து மற்றும் அனுபவங்களை வழங்க அழைக்கப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு உங்கள் பின்னூட்ட விவரம் மிகவும் முக்கியமானது, மேலும் நீங்கள் ஐந்து நிமிடங்கள் எடுத்து இந்தக் கருத்துக்கணிப்பை நிறைவு செய்வீர்கள் என்று உண்மையிலேயே நம்புகிறோம். இந்தக் கருத்துக்கணிப்பு பெயர் குறிப்பிடப்படாதது மற்றும் தன்னார்வமானது.

4-12 ஆம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு, அவர்கள் கருத்துக்கணிப்பை முடிப்பதற்காக அழைப்பு விடுக்கும் ஒரு மின்னஞ்சல் இன்று அனுப்பப்படும்.

எங்கள் YRDSB சமூகத்தின் அனைத்து உற◌ுப்பினர்களுக்கும் அவர்களின் ஆதரவுக்காக முன்கூட்டியே நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம், மேலும் உங்கள் கருத்துகளைப் பெற்றுக்கொள்வதனை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
**தொலைபேசி**: 905.722.3201 905.895.7216
905.727.3141 416.969.8131
**தொலைநகல்**: 905.727.1931
**வலைத்தளம்**: www.yrdsb.ca

MYSP பற்றி மேலும் அறியத், தயவுசெய்து எமது வலைத்தளம்-ஐப் பார்வையிடவும்.

தங்கள் உண்மையுள்ள,
Ron Lynn
சபைத் தலைவர்